**செய்தி வெளியீடு எண் : 1426** **நாள்:25.12.2021**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டில் 14 முக்கிய அறிவிப்புகளை அறிவித்தார்கள். அதில், பாரதியார் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்கு சென்னை பாரதி நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சி ஒன்று செய்தித் துறையினரால் நடத்தப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் 04.12.2021 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் பெரும்புலவன் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமைகளை புகழ்பாடும் ஓராண்டு தொடர் நிகழ்ச்சிகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக 4–வது வாரமாக இன்று 25.12.2021 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில் மகாகவி பாரதியாருக்கு "ஸ்வர்ண நாட்டியாலயா மாணவிகளின் பரதநாட்டிய அஞ்சலி" நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நடன மற்றும் திரைப்பட இயக்குநருமான திருமதி சுதா சுவர்ணலட்சுமி அவர்கள் அறிமுகவுரையாற்றும் போது, தமிழ்நாடு அரசின் சார்பில் மகாகவி பாரதியாரின் புகழ்பாடும் ஓராண்டு தொடர் நிகழ்ச்சிகளை நடத்தி வருவது மிகவும் பெருமைக்குரியதாகும்.

என்னைப் போன்ற கலைஞர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதை மிகவும் பெருமையாக கருதிகிறேன். மகாகவி பாரதியார் வாழ்ந்த இந்த இல்லத்தில் இன்றைய இளம் தலைமுறையினர் நாட்டியமாடுவதை மிக பெரிய வாய்ப்பாக கருதுகிறேன் எனக் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு.வி.என்.அண்ணாதுரை அவர்கள் வரவேற்று பேசினார். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.எஸ்.ரமேஷ் நன்றியுரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**